**ஹொரொவ்பொதான பிரதேச சபையி - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 உரிமை மறுப்பு அபிப்பிராயம்**

ஹொரொவ்பொதான பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று/ தேறிய சொத்துக்கள்/ உரிமை மாற்றங்கள் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றை நான் தெரிவிக்கவில்லை. ஊரிமை மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை என்னால் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன்.

**1.2 உரமை மறுக்கப்பட்ட அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் மறுக்கப்படகிறது.

**1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந் நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களிற்கான இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமத்திற்கு (இ.க.நி) இணங்க பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

இலங்கை கணக்காய்வு நியமத்திற்கு இணங்க மேற்கொள்ளப்படும் கணக்காய்வின் அடிப்படையில் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் அறிக்கையை வழங்குதல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும், உரிமை மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில்

விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றினை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளளேன்.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கடந்த ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

**1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பாக கணக்காய்வு அவதானிப்புகள்**

**1.6.1 கணக்கீட்டுக் கொள்கைகள்**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | உள்ளூராட்சி நிறுவனங்களிற்கான கணக்கீட்டு நியமம் - 17 இன் 3.6 பந்தி பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டு தகவல்களுடன் ஒப்பீட்டு ரீதியாக சமர்பித்திருக்கவில்லை. | ஏற்றுக்கொள்வதாக. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) | உள்ளூராட்சி நிறுவனங்களிற்கான கணக்கீட்டு நியமம் - 17 இன் 3.13(ஈ) பிரகாரம் காசுப் பாயச்சல் கூற்றொன்றை நிதிக்கூற்றுக்களுடன் சமர்பித்திருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

**1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் சொத்துக்களை குத்தகை வழங்கிய வருமானம் ரூபா.1,064,667 குறைத்து காண்பிக்கப்பட்டு இருந்தது. | கருதுகோள்களை அடிப்படையாகக் கொண்டு பில்லிடல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக. | சரியான பெறுமதிகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் வாராந்த சந்தை வருமானம் ரூபா.2,057,060 ஆக கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக. | -மேற்படி- |
| (இ) | மீளாய்வாண்டில் அறிவித்தல் பலகை வருமானம் ரூபா.188,080 தொகை கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | புதிதாக அறிவித்தல் பலகை பொருத்தியதால் பரீட்சை மீதியில் கூடுதலாக காட்டப்படுவதாக. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2022 சனவரி 01 திகதியன்று பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் வருமானம் ரூபா.386,468 ஆக குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | மதிப்பிடப்பட்ட அடிப்படையில் நீதிமன்ற தண்டப்பணம் 2021 ஆண்டில் கணக்கீடு செய்ததால் இவ் வித்தியாசம் ஏற்பட்டுள்ளதாக. | -மேற்படி- |
| (உ) | 2020, 2021 ஆண்களிற்காக பெறவேண்டிய முத்திரை கட்டணம் ரூபா.673,250 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக. | -மேற்படி- |
| (ஊ) | LDSP கருத்திட்ட மற்றும் உள்ளூராட்சி திணைக்கள ஏற்பாடுகளினால் கொள்வனவு செய்த பெறுமதி ரூபா.2,060,590 ஆன 11 கணனி, அச்சியந்திரம் மற்றும் பிரதியிடல் இயந்திரம் என்பன மற்றும் நிர்மாணிக்கப்பட்ட பெறுமதி ரூபா.4,995,000 ஆன சூரிய வலுத் தொகுதி ஆதன பொறி மற்றும் உபகரணமாக மற்றும் மூலதன மானியமாக கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்களை சரியாக இனங்காண வேண்டும். |
| (எ) | 2021 ஆண்டில் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்ட பெறுமதி ரூபா.13,331,923 ஆன நிலையான சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஏ) | LDSP கருத்திட்ட ஏற்பாட்டினால் ஹொரொவ்பொதான பொது அங்காடியை மீண்டும் நிர்மாணிப்பதற்குரியதாக 2022 திசெம்பர் 31 திகதி உறுதிப்படுத்திய வேலைகளின் பெறுமதி ரூபா.5,822,118 கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை. | ஏற்றுக் கொள்வதாக. | சரியான பெறுமதிகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஐ) | பெண் அங்கத்தவர்களை பலப்படுத்தும் கருத்திட்டத்தின் கீழ் உள்நாட்டு தானிய உற்பத்தி கருத்திட்டமொன்றிற்காக மீளாய்வாண்டினுள் உள்ளூராட்சி திணைக்களத்திலிருந்து கிடைத்திருந்த ஏற்பாடுகளில் ரூபா.100,000 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஒ) | மீளாய்வாண்டில் டெக்டரிற்கு புள்வெட்டும் இயந்திரமொன்றை பொருத்தும் செலவு ரூபா.495,000 | -மேற்படி- | சரியான கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகை மீண்டுவரும் செலவொன்றாக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஓ) | மீளாய்வாண்டில் மூலதன மானிய பெறுவனவு ரூபா.6,770,923 ஆன போதும் விரிவான வருமானக் கூற்றில் ஏனைய விரிவான வருமானத்தின் கீழ் அது ரூபா.29,258,803 ஆக கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | சரியான பெறுமதிகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஓ) | 2021 ஆண்டில் கடன்கொடுனரிற்காக செலுத்திய ரூபா.19,138,084 தொகை மற்றும் LDSP கருத்திட்டத்திற்கான கொடுப்பனவு ரூபா.10,176,160 தொகை மீளாய்வாண்டில் நிதிக் கிரயத்தினுள் மீண்டுவரும் அல்லாத செலவின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | சரியான கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஔ) | 2021 ஆண்டில் கடன்கொடுனர் மீதி மற்றும் 2022 ஆண்டில் கடன்கொடுனர் மீதியான ரூபா.2,312,707 தொகை மீளாய்வாண்டின் செலவொன்றாக காண்பிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (க) | சபையின் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று நிலவிய ரூபா.1,722,041 ஆன நூலக புத்தகங்கள் தொடர்பாக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் அல்லது குறிப்பினூடாக வெளிப்படுத்தி இருக்கவில்லை. | -மேற்படி- | நூலக புத்தகங்களின் பெறுமதிகள் நிதிககூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும் |
| (கா) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று ரூபா.69,854,429 ஆன நிலையான சொத்துக்களிற்குரிய பெறுமானத் தேய்வை கணக்கிட்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | -மேற்படி- | சரியான பெறுமதிகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 05 விடயங்களிற்குரிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றின் காட்டப்பட்ட பெறுமதி மற்றும் அட்டவணைகளில் காட்டப்படும் பெறுமதிக்கிடையில் ரூபா.3,853,391 வித்தியாசமொன்று ஆனது. | சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக. | அட்டவணைகள் துணை அறிக்கைகளுடன் இணங்க வேண்டும். |
| (ஆ) | 02 விடயங்களிற்குரிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றின் பிரகாரம் பெறுமதி மற்றும் ஆரம்ப புத்தக பெறுமதிக்கிடையில் ரூபா 86,000 வித்தியாசமொன்றானது. | -மேற்படி- | வித்தியாசத்திற்கான காரணங்களை கண்டு சரி செய்ய வேண்டும். |

**1.6.4 கணக்காய்விற்கான ஆவண சான்றுகள் இல்லாமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் மொத்தப் பெறுமதி ரூபா.1,145,363,099 ஆன 179 கணக்கு விடயங்களில் சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள், செலவுகள், உரிமை கணக்குகளிற்குரிய முறையாக சமப்படுத்திய பேரேட்டுக் கணக்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்காததால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக பரிசோதிக்க முடியவில்லை. | சமர்பிக்க நடவடிக்கை எடுப்பதாக. | நிதிக்கூற்றுக்களை தயாரிக்க முன்னர் பேரேட்டு கணக்குகள் தயாரிக்கப்பட்டு இருக்க வேண்டும். |
| (ஆ) | கடந்த ஆண்டிற்குரிய ரூபா.671,679,814 ஆன வரவு மற்றும் ரூபா.658,480,461 ஆன செலவு மீதிகள் ஆரம்ப ஜர்னல் குறிப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருக்வில்லை. அவ்வாறே மீளாய்வாண்டில் ரூபா.167,830,375 ஆன ஜர்னல் குறிப்பு மற்றும் பேரேட்டு கணக்கு பேணிச் செல்லப்பட்டிருக்வில்லை | ஏற்றுக் கொள்வதாக. | ஆரம்ப பேரேட்டுக் கணக்கு மற்றும் ஜர்னல் குறிப்பு சமர்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | 2022 ஜனவரி 01 திகதியன்று ரூபா.316,162,079 ஆன சொத்துக்கள், 2021 ஆண்டில் கணக்கீடு செய்யப்படாத ரூபா.2,060,590 ஆன கணனி மற்றும் உபகரண பெறுவனவு மற்றும் ரூபா.13,331,923 ஆன நிர்மாண கருத்திட்டத்திற்காக பெறுமானத் தேய்வு மேற்கொண்டு விரிவான வருமானக் கூற்றில் மற்றும் சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்றில் காண்பித்திருக்காததால் சரியான செலவு மற்றும் சொத்து பெறுமதியை உறுதி செய்து கொள்ள முடியவில்லை. | - மேற்படி - | பெறுமானத் தேய்வு சரியாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் மிகையில்/ பற்றாக்குறையில் இனங்கண்ட மூலதன செலவு மானிய செலவு விரிவான வருமானக் கூற்றில் காண்பித்திருக்காததுடன் மீளாய்வாண்டில் பெறுமானத் தேய்வு கணக்கிடப்படாததால் அப்பெறுமதியை இனங்கண்டிருக்கவில்லை.<br>மீளாய்வாண்டில் மூலதன மானியமாக ரூபா.29,258,803 மாத்திரம் காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | சரியான மூலதன மானியத்தை இனங்கண்டு பெறுமானத் தேய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மீளாய்வாண்டில் கடன்கொடுனர் கணக்கின் மூலம் திரண்ட நிதியத்திற்கு செய்மையாக்கிய ரூபா.35,813,811 மற்றும் கடன்படுனர் கணக்கின் மூலம் செய்மையாக்கிய ரூபா.34,785,534 தொடர்பான விபரங்கள் சமர்பிக்கப்படவில்லை. | - மேற்படி - | உறுதிப்படுத்தல்கள் சமர்பிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | பெறுமதி ரூபா.45,615,006 ஆன இயந்திரங்கள் மற்றும் ரூபா.169,500 ஆன பொறிகளிற்குரிய அட்டவணைகள் கணக்கயாவிற்கு சமர்பிக்கப்படவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | - மேற்படி - |
| (ஏ) | 02 அரச வங்கிகளில் பேணிச் செல்லும் 03 நடைமுறைக் கணக்குகளிற்குரிய மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று ரூபா.13,669,158 ஆன மீதிகளை உறுதி செய்த சான்றிதழ்களை கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை | -மேற்படி- | - மேற்படி - |

**1.7 இணக்கமின்மைகள்**

**1.7.1. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணக்காமை சந்தர்ப்பங்கள் பின்வருமாறு காட்டப்படுகின்றது.

| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு** | **இணக்கமின்மை** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|
| (அ) | 2009 ஜுலை 17 திகதிய 2009/09(1) இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | சபையில் பொருத்தியிருந்த விரல் அடையால இயந்திரம் 2020 ஆண்டு முதல் செயலற்றிருந்தது. | ஏற்றுக் கொள்வதாக. | பொது நிர்வாக சுற்றறிக்கை பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) | வடமேல் மாகாண, உள்ளூராட்சி ஆணையாளரின் 2019 திசெம்பர் 31 திகதிய 2019/02 கொண்ட சுற்றறிக்கை | தினந்தோறும் மற்றும் மாதாந்தம் பேணிக் கொள்ள வேண்டிய தினப் பெறுவனவு வகைப்படுத்தும் பதிவேடு (LG 04) மற்றும் வருமானம் அறவிடல் தொடர்பாக மாதந்த முன்னேற்ற அறிக்கை (LG 06) தயாரித்திருக்கவில்லை. | - மேற்படி - | சுற்றறிக்கை பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (இ) | 2020 ஒக்டோபர் 02 திகதிய 05/2020 இலக்க சொத்துக்கள் | செயளற்று காணப்படும் வாகனங்களை திருத்த அல்லது பராதீனம் செய்ய | ஏலத்தில் விற்க நடவடிக்கை எடுப்பதாக. | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| முகாமைத்துவ சுற்றறிக்கை | தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை மிகைத்த செலவு ரூபா.7,216,319 தொகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் செலவை மிகைத்த் வருமானம் ரூபா.24,094,849 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **வருமான மூலம்** | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **பில் போடப்பட்ட வருமானம்** | **சேர்க்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை** | **மதிப்பிடப்பட்ட வருமானம** | **பில் போடப்பட்ட வருமானம** | **சேர்க்கப்பட்ட வருமானம** | **திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை** |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 1,988,400 | 1,786,680 | 1,832,939 | 1,364,979 | 1,822,000 | 1,697,632 | 1,612,972 | 1,411,238 |
| (ii) | வாடகை | 11,206,000 | 6,991,454 | 7,893,798 | 6,593,830 | 9,591,000 | 1,938,060 | 1,467,430 | 7,496,174 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 5,035,000 | 813,848 | 431,548 | 1,407,600 | 4,562,000 | 7,286,756 | 6,252,456 | 1,035,300 |
| (iv) | ஏனைய வருமானம் | 5,964,000 | 2,138,473 | 333,803 | 3,509,088 | 4,298,000 | 1,279,394 | 2,238,522 | 1,704,418 |
| | | 24,193,400 | 11,730,455 | 10,492,088 | 12,875,497 | 20,273,000 | 12,201,842 | 11,571,380 | 11,647,130 |

#### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தல் செயலாற்றுகை தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| (i) | 1994 ஆண்டின் மதிப்பீட்டின் மீது வீதவரி அறவிடப்படுவதுடன் 2022 திசெம்பர் 31 திகதியன்று ரூபா.234,083 ஆன வீதவரி நிலுவை வருமானம் அறவிட வேண்டியதாக காணப்பட்டது. | புதிய மதிப்பீட்டை தயாரிக்க அனைத்து தகவல்களையும் உள்ளூராட்சி திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக. | புதிய மதிப்பீடு பிரகாரம் வீதவரி அறவிட நடவடிக்கைகளை விரைவில் எடுக்க வேண்டும். |
| (ii) | 2022 திசெம்பர் 31 திகதி நிலுவை குப்பை வரி ரூபா.933,700 ஆனது. | நிலுவை தொகையிலிருந்து ஒரு பகுதி அறவிடப்பட்டுள்ளதாக. | அனைத்து நிலுவை தொகையையும் அறவிட செயற்பட வேண்டும். |

**(ஆ) வாடகை**

| | | | |
|---|---|---|---|
| (i) | ஆண்டு 01 யையும் 08 யையும் விஞ்சிய காலமாக அறவிடப்படாது காணப்படும் சொத்து குத்தகை வழங்கல் நிலுவை மீதி ரூபா.4,304,506 ஆனது. | நீண்ட காலமாக நிலவிவரும் மீதியொன்றாவதுடன் அறவிட முடியாததால் பதிவழிக்க தேவையான நடவடிக்கை எடுப்பதாக. | பதிவழிக்க முறையான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். |
| (ii) | 2022 திசெம்ப்ர் 31 திகதியன்று பிரதேச சபையின் இயந்திரங்களை வாடகைக்கு வழங்கியதால் 32 தரப்பினரிடமிருந்து அறவிட வேண்டிய மீதி ரூபா.1,106,394 ஆகும். | அறவிட நடவடிக்கை எடுப்பதாக. | அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(இ) அனுமதிபபத்திர கட்டணம்**

| | | |
|---|---|---|
| பல ஆண்டுகளாக பெற வேண்டிய அனுமதிப்பத்திர கட்டண மீதி ரூபா.1,043,300 ஆனது. | -மேற்படி- | -மேற்படி- |

**(ஈ) ஏனைய வருமானம்**

| | | |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அலுவலர்களிடமிருந்து 2022 திசெம்பர் 31 திகதியன்று அறவிட வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா.1,841,139 மற்றும் முத்திரை கட்டணம் ரூபா.1,667,950 ஆனது. | பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக. | அழைப்பித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3. செயற்றாட்டு மீளாய்வு**
**சட்டத்தால் விதிக்கப்பட்டுள்ள பணிகளை மேற்கொள்ளல்**

பிரதேசசபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனை சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

**மாடறுப்பு மடுவங்களை பேணிச் செல்லல்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | எலிகிம்புலாகட, இஹலஅங்குநொச்சிய, திம்பிரியாத்தாவல ஆகிய இடங்களில் காணப்பட்ட மாட்டிறைச்சிக் கடைகள் தொடர்பாக 1893 இன் 09 இலக்க மாடறுப்பு கட்டளைச் சட்டம் பிரகாரம் மாடறுப்பு மடுவ அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள தேவையான அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | சுகாதார மருத்துவ அலுவலர்களின் மற்றும் பொது சுகாதார பரிசோதக அலுவலர்களின் பரிசோதனை மற்றும் பரிந்துரை பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக. | மாடறுப்பு மடுவ வசதிகள் சரியாக உள்ளதாக உறுதி செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 1988 ஆகஸ்ட் 23 திகதிய பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட துணை விதிகள் வர்தமாணி அறிவித்தலில் 32 துணை விதியின் 09 பிரிவு | ஏற்றுக் கொள்வதாக. | கட்டணம் அறவிடவும் அறுக்கப்படும் கால்நடைகளின் |

| | | |
|---|---|---|
| பிரகாரம் பரிசோதிக்கப்படும் இறைச்சிக்காக சபையின் இலச்சினையை பயன்படுத்துவதற்காக ஒரு கிலோவிற்காக ரூபா 10 இற்கு அதிகரிக்காத கட்டணமொன்று அறவிடல் மற்றும் அறுக்கப்படும் கால்நடைகளின் விபரம் குறித்த படிவம் பிரகாரம் பெற்றுக் கொள்ள சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | விபரங்களை பெற்றுக் கொள்ளவும் செயற்பட வேண்டும். |

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுக்களை 2023 பெப்ரவரி 28 திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்பிக்க வேண்டிய போதும் இச் சபைக்குரிய நிதிக்கூற்றுக்கள் 2023 ஏப்ரல் 10 திகதி கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்ளப்படுவதாக. | உரிய திகதியை போன்றே சரியாக கணக்குகளை சமர்ப்பிக்க வேண்டும். |

**4.2 சுற்றாடல் பிரச்சினை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2012 ஆண்டில் ரூபா.3,203,577 ஆன கிரயமொன்றை மேற்கொண்டு நிர்மாணிக்கப்பட்ட மொரகொல்ல மூகலானவில் அமைந்துள்ள கழிவுப் பொருள் மத்திய நிலையம் முழுமையாக செயலற்று காணப்பட்டதுடன் அங்கு எவ்வித சேதனப் பசளை உற்பத்திச் செயற்பாடுகளும் இடம்பெறவில்லை. | ஊழியிர் பற்றாக்குறை காரணமாக மூடிவிட வேண்டி ஏற்படும் சந்தர்ப்பம் உள்ளதாக. | கருத்திட்டத்தை செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | அதிகார பிரதேசத்தில் திரட்டப்படும் குப்பைகளை எவ்வித வகைப்படுத்தலும் இன்றி மொடோகோனேவ காப்பிடத்திற்கு வெளியிடப்பட்டு வந்தது. | தற்போது இந்த இடத்தில் குப்பைகளை வெளியிடல் நிறுத்த்பபட்டுள்ளதாக. | முறையாக குப்பைகளை வெளியேற்றல் செய்ய வேண்டும். |